நகர்மன்றம்

உதகமண்டலம்

11.03.2024

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற மார்ச் 2024ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 11.03.2024 திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்**

1. இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள YMCA செல்லும் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (Snow Down Road) சாலையில் 01.03.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஏல கேள்வி/ ஒப்பந்தப்புள்ளி தொகை | வங்கி வரைவோலை எண் மற்றும் வங்கி | வங்கி வரைவோலை நகராட்சியால் ஒப்படைக்கப்பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1 | பொது ஏலம் திரு.நாசில்குட்டன் S/O புற்றுதிளி க.எண்.718, தலைகுந்தா போஸ்ட், தலைகுந்தா, உதகை | 5,00,000/- | 070103, 070104 INDIAN BANK Rs.4,00,00/- Rs.4,00,00/- | 29.02.2024 |
| 2 | ஒப்பந்தபுள்ளி திரு.R.K.மிதுன் 35 ABC மேரிஸ் ஹில், உதகை | 5,25,000/- | 701308, 701309 BANK OF MAHARASHTRA Rs.4,00,00/- Rs.4,00,00/- | 01.03.2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 3 | ஒப்பந்தபுள்ளி<br>திருமதி.R.கீர்த்தனா<br>53, விக்ங்டன் ஹவுஸ்<br>உதகை | 5,50,000/- | 009261, HDFC BANK, 166471 STATE BANK OF INDIA<br>Rs.4,00,00/-<br>Rs.4,00,00/- | 01.03.2024 |

மேற்கண்ட ஏல கேள்வி/ ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வ.எண்.2,3 ல் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி (Tender Schedule) படிவத்தில் ஆணையாளர் அவர்களின் கையொப்பம் இல்லாமல் ஒப்பந்தபுள்ளி போடப்பட்டுள்ளதால், இந்த ஒப்பந்தபுள்ளியை நிராகரிப்பு செய்து வ.எண்.1ல் பொது ஏலத்தில் கோரிய ஏலக் கேள்வி தொகை ரூ.5,00,000/ஐ ஏற்று திரு.நாசில்குட்டன் S/O புற்றுதிளி க.எண்.718, தலைகுந்தா போஸ்ட், தலைகுந்தா, உதகை அவர்களுக்கு மேற்கண்ட வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.அ1/10286/2020)**

2. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.5 கீழ் கோடப்பமந்தில் இருந்து மேல் கோடப்பமந்து செல்லும் நடைபாதையில் விநாயகர் கோவில் அருகில் உள்ள சிறுபாலம் ஆனது பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அப்பகுதியில் உள்ள பொதுமக்கள், வயதானவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் ஆகியவர் இந்த பாலத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பழுதடைந்த பாலத்தை முற்றிலும் இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.22.00/- இலட்சத்திற்கு HADP நிதி பெற்று பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

3. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் குமரன் நகர் அரிஜன காலனி அருகில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரன் கோவில் அருகில் கடந்த மழையில் மண்திட்டு ஆனது சரிந்து விட்டது. இந்த மண்திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்து விட்டது. அதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வயதானவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் நடத்து செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே

மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச்சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.75/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

4. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.36 மேல் காந்தி நகர் பகுதியில் சாலையின் ஓரத்தில் அமைக்கப்பட்டு இருந்த பாதாளச் சாக்கடை கழிவுநீர் தேக்க தொட்டி (Septic tank) ஆனது கடந்த வாரம் கழிவுநீர் தொட்டியின் அருகில் தடுப்புச்சுவர் அமைக்கும் போது பழுதடைந்து உடைந்து விட்டது. இதனால் மேல் காந்தி நகர் பகுதியில் இருந்து வரும் கழிவுநீர் ஆனது அருகில் உள்ள இடங்களுக்கு செல்கிறது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த கழிவுநீர் தொட்டியை அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிவுநீர் தேக்க தொட்டி (Septic tank) அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

5. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 31ல் உள்ள குமரன் நகர் பகுதியில் உள்ள பள்ளிவாசல் அருகில் உள்ள பாதாளச் சாக்கடை மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆனது முற்றிலும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் ஆனது அடைப்பு ஏற்பட்டு அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று விடுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். மேலும் அப்பகுதியில் நோய் தொற்றும் அபாயமும் ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பாதாளச் சாக்கடை பைப்லைன் மற்றும் மேன்ஹோல் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.75/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

6. இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN 43 F 9408 Jet rodding machine cum sullage sucker டயர்கள் அனைத்தும் தேய்மானம் அடைந்துள்ளதால் வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே புதிய டயர்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,16,400/-க்கு மட்டும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி வாகனத்தின் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,16,400/-**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**
   **(ந.க.எண்.இ2/1068/2024)**

**7.** இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN 43 C 1837 Sullage sucker கழிவுநீர் உறிஞ்சும் மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளதால், வாகனத்தின் மூலம் கழிவுநீர் அகற்ற மிக சிரமமாக உள்ளதால், மேற்படி புதிய மோட்டார் பொருத்த ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,64,200/-க்கு மட்டும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி வாகனத்தின் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,64,200/-**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**
   **(ந.க.எண்.இ2/994/2024)**

**8.** இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டிற்குக்கான சாலைவரி கீழ்கண்டவாறு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த வேண்டி உள்ளது.

| வ.எண். | வாகன எண் | 1% | செலுத்தப்பட வேண்டிய தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | TNN 6380 | 97 | 9682 | 9779 |
| 2 | TN 43 3043 | 97 | 9682 | 9779 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | TN 43 C 3981 | 76 | 7600 | 7676 |
| 4 | TN 43 C 1837 | 97 | 9682 | 9779 |
| 5 | TN 43 F 9408 | 100 | 10000 | 10100 |
| 6 | TN 43 E 1203 | 100 | 10000 | 10100 |
| 7 | TN 43 J 4399 | 100 | 10000 | 10100 |
| 8 | TN 43 E 1631 | 97 | 9682 | 9779 |
| 9 | TN 43 K 1696 | 100 | 10000 | 10100 |
| | | | | **87192** |

மேற்கண்ட தொகை ரூ.87,192/- ஐ வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்**
2. **மேற்படி வாகனங்களின் சாலை வரியினை உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு முன் அனுமதி பெற்று தொகையினை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.இ2/2670/18)**

9 இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN 43 K 1696 Jet rodding machine cum Sullage sucker பழுதுகள் சரி செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி வாகனத்தினை இயக்க முடியாத காரணத்தினால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,98,900/-க்கு மட்டும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி வாகனத்தின் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,98,900/-**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**

**(ந.க.எண்.இ2/833/2024)**

**10.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் 22-02-2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது
.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | TN 43 E 1203 JCB வாகனத்தின் பழுதுகள் மேற்கொள்ளும் பணி | 3.50 |

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் தொகை ரூ.லட்சத்தில் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரினன் பெயர் மற்றும் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | திருவாளர். Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam ரூ.3,49,100/- | திருவாளர். Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam ரூ.3,49,100/- |
| 2 | திருவாளர். Mettupalayam Auto Service Center, Tiruppur ரூ.3,50,100/- | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.இ2/8175/2023)**

**11.** இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN 43 K 1696 Jet rodding machine cum sullage sucker டயர்கள் அனைத்தும் தேய்மானம் அடைந்துள்ளதால் வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே புதிய டயர்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,16,400/-க்கு மட்டும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி வாகனத்தின் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,16,400/-**

2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**
**(ந.க.எண்.இ2/1069/2024)**

12. இந்நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் உள்ள அக்ரஹாரம் பகுதியில் உள்ள வெளிப்புற நகராட்சி கடைகள், அரசு உயர் மேல்நிலை பள்ளி செல்லும் பகுதியில் அமைந்துள்ள மேல் தளத்தில் உள்ள நகராட்சி கடைகள், சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள், பெனட் மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள், வில்லோ பவுண்ட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள் மற்றும் M.S. லைன் முதல் தளத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள் மற்றும் தற்காலிக மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள மைதானத்திற்குள் நிறுத்தப்படும் இரண்டு சக்கர / நான்கு சக்கர வாகனங்களுக்கு வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகியவற்றிக்கு 07.03.2024ல் நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர் என்ற விவரம் பின்வருமாறு

1. அக்ரஹாரம் பகுதியில் உள்ள நகராட்சி கடைகள்

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | அக்ரஹரம் பகுதியில் உள்ள நகராட்சி கடை எண். 07, 08, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 23, 25, 26, 29, 30, 31 | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

2. அரசு உயர் மேல்நிலை பள்ளி செல்லும் பகுதியில் அமைந்துள்ள மேல் தளத்தில் உள்ள நகராட்சி கடைகள் 05, 08, 09, 10

கடை எண் 05

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எ.அசரப்அலி<br>S/o. அப்துல் ரஹமான்<br>109/2, ஆம்ஸ் ஹவுஸ் சாலை, உதகை | ரூ.14850/- |
| 2 | திரு.எம்.சபீதின்<br>S/o. ஆர்.முகம்மது செரீப்,<br>42/65, சப்கோர்ட் காலனி, உதகை | ரூ.14900/- |

மேற்கண்ட ஏலக் கேள்வி கோரப்பட்டதில் அதிக பட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.14900/- ஐ ஏற்று திரு.எம்.சபீதின் S/o. ஆர்.முகம்மது செரீப், 42/65, சப்கோர்ட் காலனி, உதகை என்பவருக்கு கடையினை ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இதில் கடை எண் 08, 09, 10 கடைக்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

3. சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி கடைகள்

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி வெளிபுற கடைகள் 04, 09, 12, 13, 14, 16, 17, 22, 23, 24, 25, 26, 27 | | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

4. பெனட் மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள்

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| பெனட் மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள் 01, 13, 16 | | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

5. வில்லோ பவுண்ட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள்

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| வில்லோ பவுண்ட் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள் 02 | | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

6. M.S லைன் முதல் தளத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடைகள் 02, 03, 05, 06, 07, 09

கடை எண் 06

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.ஜெகன்,<br>S/o. கே.குப்புராஜ்,<br>13/எ, பேண்டு லைன், உதகை | ரூ.13000/- |
| 2 | திரு.எஸ்.சரவணன்<br>303/13, கமர்சியல் சாலை, உதகை | ரூ.14900/- |

மேற்கண்ட ஏலக் கேள்வி கோரப்பட்டதில் அதிக பட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.13000/- ஐ ஏற்று திரு.கே.ஜெகன், S/o. கே.குப்புராஜ்,13/எ, பேண்டு லைன், உதகை என்பவருக்கு கடையினை ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இதில் கடை எண் 02, 03, 05, 07, 09 ஆகிய கடைக்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

7. ATC தற்காலிக மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள மைதானத்திற்குள் நிறுத்தப்படும் இரண்டு சக்கர/ நான்கு சக்கர வாகனங்களுக்கு வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| ATC தற்காலிக மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள மைதானத்திற்குள் நிறுத்தப்படும் இரண்டு சக்கர/ நான்கு சக்கர வாகனங்களுக்கு வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

மேற்கண்ட அரசு உயர் மேல்நிலை பள்ளி செல்லும் பகுதியில் அமைந்துள்ள மேல் தளத்தில் உள்ள நகராட்சி கடை 05 மற்றும் M.S. லைன் முதல் தளத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வெளிபுற கடை 06 ஆகிய கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி/ ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ள குத்தகைதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்யவும் மற்றும் இதில் ஏலம் போகாத கடைகளுக்கு மற்றும் ATC தற்காலிக மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள மைதானத்திற்குள் நிறுத்தப்படும் இரண்டு சக்கர/ நான்கு சக்கர வாகனங்களுக்கு வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகியவைகளுக்கு மறு ஏலம் கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.அ1/708/2016)**

**13.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27 ல் உள்ள சிக்கம்மன் கோவிலுக்கு கீழ் உள்ள சந்திரா என்பவர் வீட்டில் இருந்து அவலாஞ்சி சாலை வரை கடந்த ஆண்டுகளில் பெய்த கனமழையினால் மண்திட்டு ஆனது சரிந்து விட்டது. மேலும் மண்திட்டு உடன் சேர்ந்து நடைபாதையும் பழுதடைந்து உள்ளது. இதனால் அவ்வழியாக செல்லும் பள்ளிக்குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்து உள்ள மண்திட்டு உடன் நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமரி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**14.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28க்கு உட்பட்ட டன்மீர் பகுதியில் உள்ள நகராட்சி பம்ப ஹவுஸ் பகுதியில் இருந்து சந்தோஷ் பேக்கிரி மணி லாட்ஜ் பகுதிக்கு செல்லும் 2" குடிநீர் குழாய் ஆனது பழுதடைந்து உள்ளதால் குடிநீர் ஆனது வீணாகிறது. இதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட பகுதி மக்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பழுதடைந்த 2" குடிநீர் குழாயிக்கு பதிலாக புதிய 2" குடிநீர் குழாய் அமைக்க

வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.60/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமரி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**15.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 8 ல் உள்ள கல்வீடு செல்லும் பாலிடெக்னிக் சாலையில் திரு.விஸ்வநாதன் வீடு அருகே மிகவும் பழமை வாய்ந்த கல்வெட்டு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கால்வாயில் மழைகாலங்களில் மண் அடித்து வரப்பட்டு கால்வாயில் படிந்தும் கல்வெட்டு அடைப்பும் ஏற்படுகிறது. இதனால் மழைக்காலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. இதனால் மழைக்காலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்குள்சென்று விடுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் புதிய கல்வெட்டு அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.10/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

**16.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள மார்லிமந்து ஏரிக்கு ராஜ்பவன் பகுதியில் உள்ள வனப் பகுதியில் இருந்து இரண்டு பவுடா Channel என்ற இரண்டு கால்வாய்களில் இருந்து மழைகாலங்களில் மழைநீரும், மற்ற காலங்களில் ஊற்று நீரும் இந்த இரண்டு கால்வாய்கள் மூலம் மார்லிமந்து ஏரிக்கு மழைநீர் ஆனது இதனால் மார்லிமந்து ஏரியின் நீர்வரத்து அதிகரிக்கும், ஆனால் தற்போது இந்த இரண்டு கால்வாய்களின் மண் படித்து உள்ளதால் ஊற்று நீரானது ஏரிக்கு செல்லாமல் மார்லிமந்து ஏரியின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. எனவே இதற்காக கால்வாய் படிந்து உள்ள மண் மற்றும் செடிகளை வெட்டி அகற்ற வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.40/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணியின் அவசியம் அவசரம் கருதி நகராட்சி சட்டம் எண். 1998 பிரிவு 57 ன்படி பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

17. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.32க்கு உட்பட்ட நொண்டிமேடு பகுதியில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு நகராட்சியில் அமைக்கப்பட்டு உள்ளது. இச்சாலை ஆனது

கடந்த ஆண்டுகளில் பெய்த கனமழையினால் பழுதடைந்து உடைந்து குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இச்சாலையை பயன்படுத்தும் போது மிகவும் சிரமமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் வாகன ஓட்டிகளின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் உள்ள பழுதடைந்த சாலையை புதிதாக அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

18. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28 ல் உள்ள டன்மீர் பகுதியில் இருந்து மணி லாட்ஜ் செல்லும் நடைபாதையின் ஓரத்தில் கடந்த ஆண்டுகளில் பெய்த மழையினால் மண்திட்டு ஏற்பட்டு உள்ளது. இதனால் இந்த நடைபாதையை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பள்ளிக்குழந்தைகள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் நடைபாதை உடன் கூடிய தடுப்புசுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80/- இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

19. எதிர்வரும் 26.01.2024 75வது குடியரசு தின விழாவினை முன்னிட்டு அரசினர் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளதால் மாவட்ட ஆட்சியர் அரசு அலுவலர்கள் பணியாளர்கள் ஏராளமான பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொள்ள உள்ளதாலும் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிகள் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதால் அவர்களுக்கு போதிய குடிநீர் வசதி கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் நலன் கருதி அரசினர் கலை கல்லூரி மைதானத்தில் போதிய குடிநீர் வசதிகள் தற்காலிக கழிப்பிடங்கள் அமைத்து தர வேண்டி உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி தோரயமாக மதிப்பீட்டு தொகை ரூ.0.37/- இலடசத்திற்கு பிரிவு 57(7) 2022 ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**20.** திரு. எஸ்.முஹம்மது இர்ஷாத் , குத்தகைதாரர் அவர்களின் கடையின் பெயர் மாற்ற இயலாததால் அவர் செலுத்திய முன் வைப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

மேலும் ரூ.49,500/- யை காலங்கடந்த வைப்பு கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.எனவே காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து ரூ. 49,500/- யை குத்தகைதாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

**அனுமதி அளிக்கலாம்.**

21. திரு. முகமது அலி , குத்தகைதாரர் அவர்கள் இந்நகராட்சிக்கு சொந்தமான மார்கெட் உட்புற பகுதியில் உள்ள கடை எண் 068/1376 மற்றும் 068/1377 கடைகளுக்கான முன் வைப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேலும் ரூ.1,05,120/- யை காலங்கடந்த வைப்பு கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.எனவே காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து ரூ. 1,05,120/- யை குத்தகைதாருக்கு GJV –வாயிலாக சரிகட்டி தர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

**அனுமதி அளிக்கலாம்.**

22. இந்நகராட்சிக்கு சொந்தமான உட்புற சந்தை கடைகளில் கடை வாடகை தொகை செலுத்தமால் அதிகம் நிலுவை வைத்திருந்து 33 கடைகளுக்கு கடந்த 25/08/2021 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டதில், கடைகளின் குத்தகைதாரர்கள் வாடகை நிலுவைத் தொகையை செலுத்தாத காரணத்தினால் நிலுவை தொகையை செலுத்தக்கோரி 28/09/2021 மற்றும் 28/10/2021ஆகிய தேதிகளில் அறிவிப்புகள் சார்வு செய்தும் வாடகை நிலுவை தொகையை செலுத்தாத குத்தகைதாரர்களின் குத்தகை உரிமம் இரத்து செய்யப்பட்டு அவர்களின் கடைகள் நகராட்சி வசம் எடுக்கப்பட்டுபொது ஏலம் விடப்பட்டு வருகிறது.

மேற்படி 33 கடைகளுக்கான வாடகை தொகையை 01/11/2021 முதல் கணணியில் எழுப்பாமல் நிறுத்தி வைக்க இந்நகரமன்ற தீர்மானம் எண்.2787 நாள் 29/10/2021ல் அனுமதி பெறப்பட்டதை அடுத்து 01/11/2021 முதல் இக்கடைகளுக்கான கேட்பு எழுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

33 கடைகளின் குத்தகைதாரர்களுக்கும் கடந்த 29/03/2022 அன்று சட்டமுறை அறிவிப்புகள் இந்நகராட்சியின் சட்ட ஆலோசகரை கொண்டு தயாரிக்கப்பட்டு நிலுவைதாரர்களுக்கு சார்வுசெய்யப்பட்டதில் 33 கடைகளின் குத்தகைதாரர்களின் இருப்பிடம் குறித்த விபரங்கள் அறிய முடியாத காரணத்தினால் அறிவிப்புகள் திரும்ப வரபெற்ற காரணத்தினால் கடைகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குத்தகைதாரர்களின் சரியான விபரங்களை அறிய முடியாததாலும், மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் படி கடைகள் புதிதாக கட்டப்படுவதால், இக்கடைகள் இடிக்கப்பட்டுள்ளதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் 17/02/2024ம் தேதி நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர்

சென்னை அவர்களின் அனுமதிக்கிணங்க பின்வரும் பட்டியலில் கண்டுள்ள கடைகளின் கேட்பினை தள்ளுபடி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வரிவிதிப்பு எண் | பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1. | 068/1733 | எஸ் ஜெயந்தி | 1039028 |
| 2. | 068/1729 | கிறிஸ்டோபர் நாதன் | 1021682 |
| 3. | 068/1730 | ஆர் சாந்தகுமார் | 904434 |
| 4. | 068/1739 | ஆர் கோவிந்தராஜ் | 864100 |
| 5. | 068/1559 | பாபு எம் பி | 633257 |
| 6. | 068/1489 | சார்லி கே சி | 69158 |
| 7. | 068/1510 | “ | 534246 |
| 8. | 068/1613 | “ | 303386 |
| 9. | 068/1612 | “ | 293030 |
| 10. | 068/1614 | “ | 293030 |
| 11. | 068/1566 | “ | 290345 |
| 12. | 068/1583 | “ | 255597 |
| 13. | 068/1521 | “ | 87392 |
| 14. | 068/1520 | குணசேகரன் | 231100 |
| 15. | 068/1670 | எச் எம் பி பாபு | 508593 |
| 16. | 068/1505 | விபின் குரியன் கே | 466147 |
| 17. | 068/1507 | “ | 471607 |
| 18. | 068/1616 | “ | 236973 |
| 19. | 068/1567 | “ | 205702 |
| 20. | 068/1509 | “ | 50821 |
| 21. | 068/1508 | “ | 50821 |
| 22. | 068/1528 | “ | 48788 |
| 23. | 068/1529 | “ | 48788 |
| 24. | 068/1530 | “ | 48102 |
| 25. | 068/1077 | கே மணி லட்சுமைய்யா | 301187 |
| 26. | 068/1075 | “ | 259756 |
| 27. | 068/1083 | “ | 208260 |
| 28. | 068/2335 | லட்சுமணகுமார் | 80458 |
| 29. | 068/1076 | சங்கர் நாராயணன் | 186159 |
| 30. | 068/2340 | வேலன் செட்டியார் | 552595 |

| | | | |
|---|---|---|---|
| 31. | 068/1656 | சி நாராயணராவ் | 115979 |
| 32. | 068/1602 | ஆர். பொன்னையா பிள்ளை | 121647 |

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்**.

23. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேரிஸ்ஹில் பகுதியில் புனித ஜோசப் பள்ளிக்கு செல்லும் சாலையின் ஓரத்தில் தடுப்பு சுவர் இல்லாத காரணத்தால் மழைநீர் தாழ்வான பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் மழைநீர் புகுந்து விடுகிறது, எனவே மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவர் அமைக்கும் படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**.

24. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26-ல் குருசடி காலனி பகுதியில் காந்தல் கால்வாயினை ஒட்டி சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். காந்தல் கால்வாயினை ஒட்டி தடுப்பு சுவர் இல்லாத காரணத்தினால் கால்வாயில் மழைகாலங்களில் சேகரமாகி வரும் அதிக அளவிலான மழைநீர் அருகிலுள்ள வீடுகளுக்குள் அடிக்கடி புகுந்து விடுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கால்வாயினை ஒட்டி தடுப்புசுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

**25.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20-ல் அப்பர் பஜார், பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் அமைத்து சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளதால் கழிவுநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் நடைபாதையில் செல்கிறது. எனவே மேற்கண்ட பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட சாலையில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.25/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

26. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22-ல் அரசு மருத்துவமனை சாலையில் அடிக்கடி மண் சரிவு ஏற்படுவதால் மண் தார்சாலையில் விழுகிறது. எனவே வாகன ஓட்டுனர்கள், பொதுமக்கள் ஆகியோர் தார்சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

27. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட் வார்டு எண்.9 ல் புளுகம் லைன் பகுதியில் குடிநீர் மிகவும் பழுதடைந்துள்ளது, மேலும் ஆங்காங்கே குடிநீர் அதிக அளவில் வீணாகி வருகிறது. எனவே பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பொதுமக்கள் நலன்கருதி பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றிமையக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

28. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 ல் புதுநகர் பகுதியில் 2" விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதாலும், மேலும் குடிநீர் குழாய் மிகவும் பழுதடைந்து குடிநீர் பல இடங்களில் வீணாகிறது. எனவே பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்க இயலாத நிலை உள்ளது. எனவே பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு 2" பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.75/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

29. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் ராஜீவ் காலனி, சுல்தான்பேட் பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில்

அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் பெரும்பாலான இடங்களில் மழைநீர் கால்வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. மேலும் பெரும்பாலான இடங்களில் அதிக அளவு குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளதால் குடிநீருடன் கழிவு நீரும் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலையும் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றியமைக்கும் படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு புதிதாக குடிநீர் குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

30. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19-ல் முல்லை நகர் பகுதியில் கணபதி வீடு முதல் கப்ரேல் வீடு வரையுள்ள சாலையில் குடிநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் போது பல இடங்களில் சாலை தோண்டப்பட்டு பேவர் பிளாக் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் வாகன ஓட்டுனர்கள். பொதுமக்கள், குழந்தைகள் கடந்து செல்ல மிகவும் சிரமப்படுவதால் பழுதடைந்துள்ள பேவர் பிளாக் கற்களை பிரித்து சாலையை சீரமைத்து திரும்ப பேவர் பிளாக் கற்களை வைத்து புதிதாக சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்**

31. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள பொதுகழிப்பிடங்கள் அனைத்தையும் பழுதுநீக்கம் மற்றும் பராமரிக்கவும் தூய்மையாக வைத்துக் கொள்ளவும், நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் கோரிக்கையின் பேரில் நகரமன்ற தலைவர் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

32. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள அனைத்து உள்ளூர் குடிநீர் ஆதார நீர்தேக்கங்கள் மற்றும் கிணறுகள் அனைத்தையும் பராமரிக்கவும் வறட்சி ஏற்படும் நிலை உள்ளதால் மக்கள் தினசரி பயன்பாட்டுக்கு கொண்டு வருமாறு நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் கோரிக்கையின் பேரில் நகரமன்ற தலைவர், ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர்நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம். கோடைகால வறட்சி ஏற்படும் நிலை தவிர்க்கவும், மலர்கண்காட்சி. சுற்றுலா பயணிகள் வருகை அவசிய தேவை கருதியும் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோப்பு நடவடிக்கைகாக நகர்மன்ற தலைவர் முன்அனுமதியும் பெற்று மேல்நடவடிக்கை செய்துள்ளதையும் ஏற்கலாம்.**

33. உதகமண்டலம் நகராட்சி தற்சமயம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படும் நீராதாரங்கள் கொள்ளளவு மிக குறைவாக உள்ளதாலும் , மழை பொழிவு அளவு இல்லாததாலும் நீராதாரம் இருப்பு மிகவும் குறைந்து வருகிறது. இந்நிலையில் மாற்று திட்டமாக 1 முதல் 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்க்கும் பொருட்டு . குடிநீர் விநியோகம் செய்ய தனியார் லாரிகள் மூலம் வாடகை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு நாளொன்றுக்கு மேடான பகுதிகளில் 1 முதல் 36 வார்டுகளில் தேவையின் அடிப்படையில் பயன்பாடு செய்ய ஒரு தண்ணீர் லாரி 6 Trips வீதம் மொத்தம் ஐந்து லாரிகள் வாடகை அடிப்படையில் ரூ.1000/- வீதம் மொத்தம் 6x5x1000= Rs.30,000 /- x 25 days = Rs. 7,50,000 /- மூன்று மாத காலத்திற்கு மேற்கொள்ள தோராய செலவினம் Rs.25.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

34. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வருகின்ற பராளுமன்ற தேர்தல் 2024 நடைபெற உள்ளதால், பொதுமக்கள் வாக்குகளை அளிக்கும் பள்ளிகள் வாக்கு சாவடி மையங்கள் பராமரிப்பு பணிகள் மற்றும் இதர அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

35. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள சாலைகளில் உள்ள பழுதுகளை சரி செய்து மற்றும் குண்டும் குழியுமாக உள்ள இடங்களில் சிமெண்ட் கான்கிரீட் மற்றும் பேவர் கிளாக் கற்கள் ஒட்டும் பணிகள் (CC & PB - Patch Work).. மேற்கொள்ளும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

36. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள புதைபாதாள கழிவுநீர் வடிகால் இணைப்பு, மேன்ஹோல்கள் மற்றும் கழிவுநீர் குழாய்களின் அடைப்புகளை சரி செய்யவும், வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**37.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்க்கும் பொருட்டு தண்ணீர் குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் மின்மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

38. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் (ULB) அனைத்திற்கும் நல்ல முறையில் எரியவும், பராமரிக்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

39. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மஞ்சனகொரை பகுதியில் உள்ள மின் மயானத்தில் உள்ள எரிமேடை நல்ல முறையில் இயங்கவும், பராமரிக்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

40. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தீட்டுக்கல் பகுதியில் உள்ள Compost Yard -ல் Bio - Shredding Machine, Dromill மின்மோட்டார் இயந்திரங்களை பழுதுபார்க்கும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம். கூடுதல் பணியாளர்கள் மேற்கொள்ளவும், அதற்கான கூடுதல் மதிப்பீடு செலவினம் அரசு நிதி ஒதுக்கீடு வழங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடித கருத்துரு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.**

41. இந்நகராட்சியில் உள்ளூர் நீராதாரம் மூலம் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருவதில் (1) டைகர் ஹில், (2) மேல் தொட்டபெட்டா, (3) கீழ் தொட்டபெட்டா நீராதாரங்களில் புதியதாக வாயு குளோரின் 1kg/hr கொள்ளவில் இயந்திரம் அமைத்து, அதற்கு தேவையான அறை மற்றும் 4 Nos Gas Cylinder நிறுவுவதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று கோப்பு மேல்நடவடிக்கைக்கு செய்துள்ளதையும் ஏற்கலாம்**

42. இந்நகராட்சியில் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதில், குளோரின் கலந்து வழங்கப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே உள்ள பிளான்ட் முற்றிலும் பழுதுபட்டுள்ளதால். புதியதாக வாயுகுளோரினேசன் பிளான்ட் பார்சன்ஸ் வேலி குடிநீர் நீராதார விநியோகம் செய்யும் மூன்று திட்டங்களில் உள்ள பிரதான குழாய்களில் இணைப்பு செய்ய தேவையான 3.0 kg/hr, 2 Nos மற்றும் 2 kg/hr, 1 Nos மூன்று பிளான்ட் அமைக்க

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு ரூ,34.50 இலட்சம் மேற்படி பணியினை குடிநீர் விநியோக திட்ட நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம். நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று அவசிய தேவை கருதி கோப்பு மேல் நடவடிக்கை செய்துள்ளதையும் ஏற்கலாம்**

43. இந்நகராட்சியில் பராமரிப்பில் உள்ள புதைபாதாள கழிவுநீர் திட்டம் சுத்திகரிப்பு நிலையம் மிகவும் பழுதுபட்டும் குளோரின் இயந்திரம் இல்லாமல் உள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வரியம் மற்றும் நீதிமன்ற வழிகாட்டுதல் உத்தரவின்படி, காந்தல் STP கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் புதிதாக வாயு குளோரின் பிளான்ட் அமைத்து பராமரிப்பு செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு தண்ணீரில் குளோரின் கலந்து வெளியேற்றம் செய்ய வாயு குளோரின் பிளான்ட் 3 kg/hr மற்றும் வாயு குளோரின் சிலிண்டர் தளவாட அறை நிறுவுவதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று கோப்பு மேல்நடவடிக்கைக்கு செய்துள்ளதையும் ஏற்கலாம்**

44. இந்நகராட்சி பணியாளர்கள் பணிபுரியும்போது புதைபாதாள கழிவுநீர் குழாய் பழுதுபராமரிப்பு, ஆய்வு நிறைவு தொட்டிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்கள் 15 நபர்கள் பாதுகாப்பு உபகரணங்கள், தளவாடபொருட்கள் மற்றும் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளும் திட்ட பணிகளின் கள ஆய்வு பரிசோதனை செய்ய தேவையான பொருட்கள் வாங்கி விநியோகம் செய்யும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

45. இந்நகராட்சி தினசரி மார்க்கெட் முதல் 1st Phase கட்டிடத்தில் KNMT திட்டத்தில் 18.00 கோடி நிதி ஒதுக்கீடு பெற்று ஒப்பந்ததாதரர் - மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றில் மாவட்ட ஆட்சியர் கள ஆய்வு மேற்கொணடு கூடுதல் வசதிகள், கழிப்பிட வசதிகள், தடுப்புச்சுவர் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மற்றும் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணி இனங்கள் Third party Technical Evaluation design & drawing கட்டிட வடிவமைப்பு திருத்தம் செய்து வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் அளவுகள் ( 385 – 319) 66 Rm Addition Piles with Foundation and Depth of Pile Foundation increased ( 24.00 -20.00). 4.00 m Pile the existing position. இதற்காகும் கூடுதல் செலவினம் ரூ.3.00 கோடி அரசு நிதி ஒதுக்கீடு வழங்க கோரி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம். கூடுதல் பணியாளர்கள் மேற்கொள்ளவும், அதற்காகும் கூடுதல் மதிப்பீட்டு செலவினம் அரசு நிதி ஒதுக்கீடு வழங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடித கருத்துரு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.**

46. உதகமண்டலம் நகராட்சியில் உள்ள தினசரி மற்றும் மார்க்கெட் இரண்டாம் பகுதி KNMT திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று திட்ட மதிப்பீடு டெண்டர் மூலம் ஒப்பந்ததாதரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளபட உள்ளதில். ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள முதல் பகுதியில் வாகனம் நிறுத்தும் இடம் வசதிகள் தரைத்தளப் பகுதி முழுவதும் மேற்கொள்ள திட்ட மதிப்பீட்டில் வழிவகை ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்ட பணியை கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட , மாவட்ட ஆட்சியர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களும் முதல் பகுதியில் ( $1^{st}$ Phase Project) திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு மாற்றம் செய்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் மேற்கொள்ளப்படும் தினசரி வணிக வளாக கட்டுமானப் பணியில் தரைத்தளத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கும் ஏற்றவகையில் தரை தளம் கூடுதலாக அமைக்கவும் மற்றும் மதிப்பீட்டில் Pile Foundation ( Pile ) 6.00 m depth கூடுதல் ஆழம் 24.00 m ( மதிப்பீட்டில் 6.00 m மட்டுமே வேண்டியுள்ளது. எனவே , கூடுதலாக ஒரு தரை தளம் அமைக்கவும், பவுண்டேசன் 24.00 m ஆழம் மேற்கொள்ள தேவையான திருத்திய மதிப்பீடு செய்ய ஒப்புதல் வழங்கவும், கூடுதல் செலவினம் அரசு நிதியில் ஒதுக்கீடு கோரவும் , கருத்துரு அனுப்புவதற்கு நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

47. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9ல் சீகூர் சாலைப்பகுதியில் சாலமென் வீட்டிலிருந்து வரும் சாலையில் தெருவிளக்கு இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால், மேற்கண்ட தெரு பகுதியில் மின்கம்பிகள் புதிதாக

அமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் கோரிக்கையுடன் பேரில் மேற்கண்ட இடத்தில் புதிதாக மின்கம்பிகள் அமைக்க கோரி தமிழ்நாடு மின்சாரவரியம், உதகை அவர்களுக்கு மதிப்பீடு கோரியும் அதற்காகும் செலவினத்திற்கும் நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

48. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14 சர்ச் ஹில் சாலையில் ஸ்டீபன் சர்ச் முதல் காபிடே வரை உள்ள சாலையில் மழைநீர் கால்வாய் அமைந்துள்ளது. மேற்கண்ட சாலையானது மிகவும் குறுகலாக உள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்து RCC Recase Slab மூடி அமைக்கும் படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

49. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 க்கு உட்பட்ட மார்லிமந்து சாலையில் உள்ள மணி என்பவர் வீடு முதல் பாபு என்பவர் வீடு வரை கடந்த ஆண்டு பெய்த கனமழையின் காரணமாக தார்சாலை ஓரத்தில் இருந்த மண்திட்டு சரிந்து விழுந்து விட்டது. இதனால் இச்சாலை வழியாக கனரக வாகனங்கள் செல்லும்போது விபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் மண் திட்டு சரிந்த இடத்தில் தடுப்புச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

50. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்,2ல் உள்ள பகுதிகளுக்கு செல்லக்கூடிய சாலையானது, பாரதியார் நகர் சாலையானது கடந்த ஆண்டு பெய்த கனமழையினால் மழைநீர் செல்ல கல்வெட்டு இல்லாததால் மழைநீரானது சாலையில் தேங்கி நின்று சாலையானது பழுதடைந்து வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு இருந்த நிலையில் வரும் ஆண்டுகளில் மழை பெய்யும் போது சாலையானது பழுதடைந்து

வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் தேவைப்படும் இரண்டுஇடங்களில் புதிதாக கல்வெட்டு அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ. 8.78 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

51. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13ல் சம்மர் ஹவுஸ் பகுதியில் மற்றும் CSI CMM பள்ளி அருகில் அமைந்துள்ள பகுதிகளில் 2 " விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளதால் பல இடங்களில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பழுதடைந்து அதிக அளவு குடிநீர் வீணாகிறது. இப்பகுதியில் சுமார் 350 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. எனவே மேற்கண்ட பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைப்பது அவசியமானதாகும். எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.75 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

52. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12ல் புதுநகர் சுமதி இல்லம் பகுதியில் பாதாள சாக்கடை தொட்டிகள் மற்றும் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் நடைபாதையிலேயே செல்வதால் துர்நாற்றம் வீசுவதுடன் பொதுமக்கள், பள்ளி, குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

53. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13ல் மேரிஸ் ஹில் பகுதியில் நகல் நல அலுவலர் நகராட்சி குடியிருப்பு பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு உடைந்து, மேலும் கழிவு நீர் தார் சாலையில் வருவதால், பொதுமக்கள் , பள்ளி குழந்தைகள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். இப்பகுதியில் கழிவுநீர் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது . எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை சீரமைத்து தரக் கோரி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் மேற்கண்ட இடத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட பழைய பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

54. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்ச் ஹில் பகுதியில் 2" விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய் பல இடங்களில் பழுதடைந்துள்ளது. மேலும் மழைநீர் கால்வாயினுள் அதிக எண்ணிக்கையிலான குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் இப்பகுதியில் அமைந்துள்ள குடிநீர் குழாய்களில் கழிவுநீர் கலந்து குடிநீர் மாசுபடும் சூழ்நிலையும் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி சர்ச்ஹில் பகுதியில் மிகவும் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6.80 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

55. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 24ல் பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் மாரியம்மன் கோயில் பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளில் அமைக்கப்பட்ட குடிநீர் பகிர்மான குழாய்கள் மழைநீர் கால்வாயிலும் நடைபாதை நடுவிலும் அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் சாலையை கடக்கவும் சிரமமாக உள்ளது. மேலும் மழைகாலங்களில் கழிவுநீர் குடிநீருடன் அடிக்கடி கலந்து விடுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டுள்ளதால் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் குழாயினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட

மதிப்பீடு தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

56. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 24ல் மேல்கோவிந்தன் தெரு, கீழ் கோவிந்தன் தெரு மற்றும் லட்சுமி தெரு பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் பல இடங்களில் உடைந்து கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவதால் மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க கோரி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் கேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள கழிநர் குழாயினை சீரமைக்கவும், மழைநீர் கால்வாய் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 8.50 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

57. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 17ல் கோடப்பமந்து கால்வாய் ஓரத்தில் கால்வாயினுள் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது, இக்குடிநீர் குழாய்கள் அமைத்து சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளதாலும் இக்குழாய்கள் அதிக மழை காரணமாக பல இடங்களில் கோடப்பமந்து கால்வாயினுள் குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்தும் சில இடங்களில் குடிநீர் குழாய்களே இல்லாத நிலையில் Hose மூலம் இணைக்கப்பட்டு வருகிறது, எனவே உழவர்சந்தை பகுதி, கிரீன் பீல்டு, விநாயகர் கோயில் பகுதி குமரன் இல்லம் பகுதி மற்றும் வால்சம் சாலை பகுதிகளுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளதால் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை மாற்றியமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள 2"ø மற்றும் 3"ø விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.80 இலட்சத்திற்கு பணயினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணிமேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

58. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 17ல் கோத்தகிரி சாலை, சேரிங்கிராஸ் பகுதியில் அந்தோனியார் கோயில் முன்புறம் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், கழிவுநீர், நகரின் முக்கியமான மத்தியப் பகுதியில் அமைந்துள்ள மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் நடைபாதையில் செல்கிறது, இப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் விடுதி, வணிக வளாகங்கள், வங்கி, பெட்ரோல் பங்க் மற்றும் குடியிருப்புகளும் அமைந்துள்ள இடமாகும். மேலும் இப்பகுதியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

